

கழக தலைவர் – முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72–வது பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் தெற்கு பகுதி, வட்ட செயலாளர் ஜெ.நடராஜன் ஏற்பாட்டில் எழுச்சியாக நடைபெற்ற மாபெரும் கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பரிசுகளை வழங்கினார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன் ஆர்.டி.பூபாலன், மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (24.03.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் தலைமையில் 2025–26 பட்ஜெட் கூட்டத் தொடரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மானிய கோரிக்கை தொடர்பாக சமூக நல ஆணையரக உயர் அலுவலர்கள் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் நேர்முக உதவியாளர்கள் (சத்துணவுத் திட்டம்) ஆகியோருடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் ஆர்.லில்லி மற்றும் சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அரசு உயர் அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் – செய்யூர் தொகுதிகளில்

# புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணி துவக்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தகவல்!

சென்னை, மார்ச். 25-

சட்டப் பேரவையில் பெரம்பலூர் தொகுதி உறுப்பினர் ம.பிரபாகரன் மற்றும் செய்யூர் தொகுதி உறுப்பினர் மு.பாபு ஆகியோர் எழுப்பிய கேள்விகளும் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அளித்த பதிலும் வருமாறு:-

**ம. பிரபாகரன்:** பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர் ஒன்றியங்களில் குரும்பலூர், ரெங்கநாதபுரம், செஞ்சேரி போன்ற பத்து கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் குறைந்த அளவு மின்சாரம் வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் அந்த பகுதியிலே 110/22 KV என்று சொல்லக்கூடிய புதிய துணை மின் நிலையம் அமைத்து சீரான மின்சாரம் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை கேட்டு அமர்கிறேன்.



**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** ஏற்கெனவே பெரம்பலூர் மாவட்டத்தில் 2 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன. உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவை ஏற்படின், கண்டிப்பாக முன்னுரிமை அடிப்படையில் பணிகள் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மு. பாபு:** செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடைக்கழிநாடு பேரூராட்சியில் சிவங்குடிபுரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் 1.14 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கு வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிருவாக அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றன. விரைவில் அதற்கான பணிகள் துவங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் ‘அமுத கரம்’ 33-வது நாள்!

## துறைமுகம் கிழக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மார்ச் 25 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 33 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளில் நேற்று (24.3.2025) துறைமுகம் மேற்கு பகுதி 1) சிவஞானம் பூங்கா பெத்து நாயக்கர் தெரு கொண்டிதோப்பு, 2) துறைமுகம் கிழக்கு பகுதி, சண்முகராயன் தெரு தையப்பன் தெரு சந்திப்பு ஆகிய பகுதி களில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்கால த்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும்,தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.



இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P. விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: கே.கவியரசு, ஆ.நாபார்த்திபன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, பரத்குமார், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், ஜி.இராமமூர்த்தி, பா.அண்ணா துரை, டி.சதிஷ் குமார், வே.பா.பிரபாகரன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடி கள் கலந்து கொண்டனர்.

### மாதவரம் தொகுதிக்குட்பட்ட பொன்னேரி தாலுகாவைப் பிரிக்க வேண்டும்!

# மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் - சார்நிலைக் கருவூலம் அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – மாதவரம் எஸ்.சுதர்சனம் கோரிக்கை!

சென்னை, மார்ச் 25-

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது பேசிய மாதவரம் தொகுதி கழக உறுப்பினர் எஸ்.சுதர்சனம், "மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சார்நிலைக் கருவூலம் அமைத்திட வேண்டும்!" என வேண்டுகோள் விடுத்தார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**எஸ். சுதர்சனம்:** மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** மாதவரம் சார்நிலைக் கருவூலத்திற்கு வருவாய்த் துறையிடமிருந்து நில ஒதுக்கீடு மற்றும் பொதுப் பணித் துறையிடமிருந்து விரிவான திட்ட மதிப்பீடு பெறப்பட்ட பின், மாதவரம் சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ். சுதர்சனம்:** மாதவரம் தாலுகா அலுவலகத்தில் சார்நிலைக் கருவூலம் இது வரை இல்லை. அது தாலுகா அலுவலகத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தாலுகா அலுவலகமும், கோட்டாட்சியர் அலுவலகமும் ஒன்றாக இருக்கிறது. அங்கேயே சார்நிலைக் கருவூலம் இருந்தால் மக்களுக்கு வசதியாக இருக்கும். இதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அங்கே 3 ஏக்கர் நிலப்பரப்பிலே, கோட்டாட்சியர் அலுவலகம், தாலுகா அலுவலகம் ஆகிய இரண்டும் ஒன்றாக இயங்கி வருகிறது. மீதி 1 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே சார்நிலைக் கருவூலம் கட்ட வசதியாக இருக்கும். ஆகவே, அதனை அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கட்டித் தருவார்களா ?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** அது திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்தாலும், நில ஒதுக்கீடு என்பது, சென்னையினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக முன்மொழிவுகள் வர வேண்டியிருக்கின்றன. அந்த முன்மொழிவுகளில், உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த நிலத்தை ஒதுக்கீடு செய்து, வருவாய்த் துறையிடமிருந்து நாம் முறையான வகையிலே ஒதுக்கீடு பெற்றவுடன், பொதுப் பணித் துறையோடு கலந்தாலோசித்து அவர்களுடைய மதிப்பீடுகளையும் அந்தக் கட்டடம் கட்டுவதற்கான பெறப்பட்டவுடன், உடனடியாக, அதனைக் கட்டுவதற்கான எல்லாவிதமான பணிகளையும் அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ். சுதர்சனம்:** என்னுடைய நீண்டநாள் கோரிக்கை. என்னுடைய தொகுதிக்குட்பட்ட பொன்னேரி தாலுகாவை பிரிக்க வேண்டுமென்று பல நாட்களாக நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். இதே சட்டமன்றத்திலும் பலமுறை நான் அதை வலியுறுத்தியிருக்கிறேன். ஆனால், இதுவரை அது முடியவில்லை, அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அதுகுறித்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்கிற போது, எனக்கு பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற நிதியமைச்சர் அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கள் என்கிறார்கள். இருவரும் ஒன்றாக, இணை பிரியாத நண்பர்கள். பக்கத்து, பக்கத்து மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். அருகருகே உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள். ஆகவே, 5 நிமிடம் செலவு செய்து, அந்த தாலுகாவைப் பிரித்துத் தர வேண்டும்.



அந்த தாலுகா 650 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. அதுமட்டும் அல்ல, 232 ஊராட்சிகளைக் கொண்டது. 2 பேரூராட்சிகளைக் கொண்டது. ஒரு நகராட்சியைக் கொண்டது. மக்கள்தொகையும் ஏறக்குறைய 7 இலட்சம் முதல் 8 இலட்சம் வரை மக்கள்தொகையைக் கொண்டது. ஆகவே, சில மாவட்டங்களில் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களிலேகூட அவ்வளவு ஊராட்சிகள் இல்லை என்பதை நான் அறிகிறேன். 8, 9 மாவட்டங்களில் 200க்கும் மேற்பட்ட ஊராட்சிகளே இல்லை. ஆனால், ஒரு தாலுகாவில் இவ்வளவு ஊராட்சிகள் என்பது பெரிய பணிச்சுமை. அரசினுடைய திட்டங்கள் மக்களை அடைவதில் ஏகப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, பக்கத்திலிருக்கிற நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்தால், நிச்சயமாக அது நிறைவேற்றப்படும் என்ற நிலை இருக்கிறது. பக்கத்திலிருக்கின்ற நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் அதைச் சொல்லி, அதற்கான முன்னெடுப்பு நடவடிக்கையை எடுப்பாரா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** உறுப்பினர் அண்ணன் சுதர்சனம் அவர்களின் கோரிக்கையை இந்த மன்றத்தில் பல உறுப்பினர்களால் அவர்களுடைய தொகுதியினுடைய சார்பில் பல கட்டங்களில் முன்மொழியப்படுவதை இந்தப் பேரவையில் நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். அவர்கள் வருவாய்த் துறையிலிருந்து அதற்கான முன்வடிவுகளை எல்லாம் சரியான முறையிலே அதை உருவாக்கி, அரசினுடைய நிதிநிலையையும் நாம் கருத்தில் கொண்டு, அவர்களுடைய கோரிக்கையை மாத்திரமல்லாமல் அனைத்து உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு, அதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் எடுத்துச் செல்வேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எதையும் கனிவோடு கவனிக்கக்கூடியவர். அவருடைய அந்தக் கனிவான அணுகுமுறையின் காரணமாகத்தான் இன்றைக்கு நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், இந்தியா முழுமையும் இருக்கக்கூடிய அனைத்து மாநில முதல்வர்கள் அவர்களோடு பேசி இன்றைக்கு அவர்களுடைய மாநில முதல்வர்களுடைய கூட்டத்தை மிகச்சிறப்பான வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இன்றைக்கு ஒருங்கிணைத்து இந்த இயக்கத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நிர்வாகத் திறமையும், மிகுந்த பொறுப்புணர்வோடு நடந்துகொள்ளக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பெற்றிருக்கக்கூடிய இந்த மாநிலத்தில் நிச்சயமாக நம்முடைய உறுப்பினருடைய கோரிக்கையும் கனிவோடு, உரிய முறையிலே அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதியில் உள்ள BENNIYAL SPORTS ACADEMY–யில் 23/03/2025 அன்று நடைபெற்ற BELT GRADUATION விருது வழங்கும் விழாவில், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் 4 வது மண்டல குழு தலைவர் டி.காமராஜ் பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர் எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

### தமிழ்நாடு, கேரளாவில் தொகுதிகளை குறைப்பதே ஒன்றிய பா.ஜ.க.வின் பகிரங்கத் திட்டம்!

# தமிழ்நாட்டில் எழுந்துள்ள போர்க்குரல் தொடர்ந்து ஒலிக்கட்டும்!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச். 25-

தாங்கள் தோல்வியுறும் தமிழ்நாடு, கேரளாவில் தொகுதிகளைக் குறைப்பதே ஒன்றிய பா.ஜ.க. அரசின் பகிரங்கத் திட்டம் என்றும், இதற்கு எதிராக தமிழ்நாட்டில் எழுந்துள்ள தென்னிந்திய முதல்வர்களின் போர்க்குரல் தொடர்ந்து ஒலிக்கட்டும் என்றும் தினகரன் நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.


தினகரன்
மார்ச் 24, 2025 திங்கட்கிழமை
போர்க்குரல் ஒலிக்கட்டும்

இதுகுறித்து 24.03.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

மாநிலங்களையும், அதன் உணர்வுகளையும் ஒன்றிய ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள மறுக்கும்போது மாநில சுயாட்சிக்காக தி.மு.க. எப்போதுமே போராடி வந்திருக்கிறது. இந்தி எதிர்ப்பு, மும்மொழி கொள்கை, ஒரே நாடுஒரே தேர்தல் என எந்தவொரு பிரச்சினையிலும் மாநிலங்களின் உரிமையை திராவிட மாடல் அரசு நிலைநாட்டி வருவது நிதர்சனம். அந்த வகையில் இப்போது மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்புக்கும் தெற்கில் இருந்து போர்க்குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

ஒன்றிய பா.ஜ.க. அரசு தற்போது நாடாளுமன்றத் தொகுதிகளை மக்கள் தொகை அடிப்படையில் மறுசீரமைப்பு செய்கிறோம் என கூறிக் கொண்டு, தென்மாநிலங்களின் தொகுதிகளை குறைக்க திட்டமிடுகிறது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் தவிர்த்து, மற்ற மாநிலங்களில் தொகுதி குறைப்புக்கான வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது. நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை கூட்டாட்சி கொள்கைக்கு எதிரானது என்பதால், இதுகுறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், பல்வேறு மாநிலங்களை சேர்ந்த முதல்வர்களுக்கும், முன்னாள் முதல்வர்களுக்கும், முக்கிய கட்சிகளின் தலைவர்களுக்கும் கடிதம் எழுதியிருந்தார்.

தொடர்ந்து கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் சென்னையில் நடந்த நிலையில், இதில் கேரள முதல்வர் பினராயி விஜயன், தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், கர்நாடகா துணை முதல்வர் டிகே.சிவக்குமார் மற்றும் கட்சி தலைவர்கள் பங்கேற்று ஒருமித்த குரல் எழுப்பினர். இப்பிரச்சினையில் ஒன்றிய அரசை எதிர்ப்பதில் திராவிட மாநிலங்கள் மட்டுமின்றி, கிழக்கில் மேற்கு வங்கம், அசாம், வடக்கில் பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்கள் இணைந்து நிற்கின்றன.

கடந்த காலங்களில் ஒன்றிய அரசுக்கு எதிரான கருத்துகள் வடக்கில் இருந்தே தொடங்கி தெற்கு நோக்கி நகரும். ஆனால் இப்போது தெற்கில் இருந்து கருத்துருவாக்கம் செய்யப்பட்டு, வடக்கு நோக்கி நகர்கிறது. அகில இந்திய அளவில் அனைத்துக் கட்சிகளின் பார்வையையும் தமிழகம் இப்போது ஈர்க்க தொடங்கியுள்ளது. அடுத்த கூட்டம் ஐதராபாத்தில் நடக்க உள்ள நிலையில், தொகுதி மறுசீரமைப்பை கால் நூற்றாண்டுக்கா வது தள்ளிவைக்க வேண்டும் என்கிற கோஷம் ஒலிக்க தொடங்கிவிட்டது.

தேர்தலுக்கு முன்னர் இந்தியாக் கூட்டணியை கண்டு பா.ஜ.க. எப்படி அச்சப்பட்டதோ, அதுபோல இப்போதும் ஒன்றிணையும் முதல்வர்களை கண்டு பா.ஜ.க. பயப்படுகிறது. தொகுதி மறுசீரமைப்பில் நமக்கு சாதகமாக உள்ள வடமாநிலங்களிலும் தொகுதிகளை இழக்க நேரிடுமோ என்கிற கவலை பா.ஜ.க.வை ஆட்டி படைக்க தொடங்கிவிட்டது. தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் தொடக்கத்தில் இருந்தே வெளிப்படைத்தன்மை இல்லை. வளர்ச்சி அடைந்த மாநிலங்களின் அரசியல், பொருளாதார வளர்ச்சிகளை இது நிச்சயம் பாதிக்கும். மக்கள் தொகையை கட்டுப்படுத்துவது என்பதில் இந்திய அளவில் எழுந்துள்ள பெரும் பிரச்சினையாகும்.

இப்பிரச்சினையை சுமூகமாக கையாண்டு மக்கள் தொகையை கட்டுப்படுத்திய மாநிலங்களை தண்டிக்கும் போக்கில் ஒன்றிய அரசு செயல்படுவது அரசியல் சட்டத்திற்கு விரோதமான தாகும். சுருக்கமாக சொல்லப் போனால், தொகுதி மறுசீரமைப்பு என்பது உ.பி.யிலும், பீகாரிலும் இப்போதுள்ள தொகுதிகளை அப்படியே நீடிக்க செய்து விட்டு, தாங்கள் தோல்வியுறும் தமிழ்நாடு, கேரளாவில் தொகுதிகளை குறைப்பதே பா.ஜ.க.வின் பகிரங்க திட்டமாகும். இதற்கு எதிரான தமிழகத்தில் எழுந்துள்ள அனைத்து முதல்வர்களின் போர்க்குரல் தொடர்ந்து ஒலிக்கட்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### லஞ்ச வழக்கில் புதுச்சேரி தலைமை பொறியாளர் கைது

# பொதுப்பணித்துறை அமைச்சர் பதவி விலக வேண்டும்! பேரவையில் தி.மு.க. - காங்கிரஸ் வலியுறுத்தல்!

## உறுப்பினர்கள் குண்டுகட்டாக வெளியேற்றம்!

பாண்டிச்சேரி, மார்ச். 25-

புதுச்சேரி சட்டப் பேரவைத் தலைவர் குறள் வாசித்து கேள்வி நேரத்தை தொடங்கினார். அப்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, லஞ்ச வழக்கில் புதுச்சேரி தலைமைச் செயலாளருக்கு இணையாக பணியாற்றிய பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் தீனதயாளன் உள்ளிட்ட அதிகாரிகளை சி.பி.ஐ. கைது செய்துள்ளது. இது புதுச்சேரி அரசுக்கு அவப்பெயர். இதற்கு தார்மீக பொறுப்பேற்று பொதுப்பணித்துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர் லட்சுமிநாராயணன் பதவி விலக வேண்டும். இது குறித்து பேரவையில் விவாதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். அதற்கு பேரவைத் தலைவர் அனுமதி மறுத்தார்.

இதை கண்டித்து எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, துணைத் தலைவர் ஏ.எம்.எச். நாஜிம், உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத், நாக. தியாகராஜன், காங்கிரஸ் கட்சித் தலைவர் மு. வைத்தியநாதன், ரமேஷ் பரம்பத் ஆகியோர் பேரவையின் மைய மண்டபத்தின் நடுவில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர். அப்போது பேரவைத் தலைவர் தர்ணாவில் ஈடுபட்டவர்களை குண்டுகட்டாக வெளியேற்ற சபைக் காவலர்களுக்கு உத்தரவிட்டனர். பின்னர் சபை காவலர்கள் தர்ணாவில் ஈடுபட்ட தி.மு.க. மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களை குண்டுகட்டாக தூக்கி வெளியேற்றினர். இதனால் அவையில் சிறிது நேரம் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, புதுச்சேரி பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் தீனதயாளன், செயற்பொறியாளர் சிதம்பரநாதன் ஆகியோர் ரூ. 7 கோடி ஒப்பந்தத்திற்கு லஞ்சம் வாங்கியபோது காரைக்காலில் சி.பி.ஐ. அதிகாரிகளால் சுற்றிவளைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது புதுச்சேரி மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. காரைக்காலில் ஒரு ஒப்பந்த பணிக்கு இவ்வளவு முறைகேடு நடந்திருக்கிறது. தலைமைப் பொறியாளரின் பணி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இந்த விவகாரத்தில் புதுச்சேரி அரசு என்ன செய்யப்போகிறது என்று மக்கள் எதிர் பார்க்கிறார்கள். அதற்காகத்தான் பேரவையில் விவாதிக்க அனுமதி கோரினோம். ஆனால் பேரவைத் தலைவர் ஆளும் அரசுக்கு ஆதரவானவர் என்பதால் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. அனுமதி அளிக்க வலியுறுத்தி தொடர்ந்து திமுக-காங்கிரஸ் உறுப்பினர்கள் தர்ணாவில் ஈடுபட்டோம். அதற்கும் செவிமடுக்காத பேரவைத் தலைவர் எங்களை குண்டு கட்டாக தூக்கி வெளியேற்ற உத்தரவிட்டார். அதன்படி நாங்கள் சபை காவலர்களால் வெளியேற்றப்பட்டோம்.

பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் அலுவலகம் சீல் வைக்கப்பட்டுள்ளதால் பொதுப்பணித்துறையில் அனைத்து பணிகளும் முடங்கிப் போய் உள்ளது. பேரவையில் இத்துறை சம்பந்தமாக எழும் கேள்விக்கு யார் பதிலளிப்பார்கள். ஆகவே, பொதுப்பணித் துறைக்கு அமைச்சராக இருக்கும் லட்சுமி நாராயணன் தார்மீக பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரினோம். எங்கள் கோரிக்கையை மதிக்காமல் சபையை தொடர்ந்து நடத்துகிறார்கள். இந்த விவகாரத்தில் நீதி கிடைக்கும் வரை நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

இது தொடர்பாக துறை அமைச்சர் ராஜினாமா செய்யக்கோரி போராட்டம் நடத்துவோம். பொதுப் பணித்துறையில் நடைபெற்ற பணிகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட கேட்போம். குறிப்பாக தரமாக இருந்த புதிய பஸ் பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு மோசமான நிலையில் பல கோடி செலவு செய்துள்ளனர். ஆனாலும் மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வர முடியாத நிலை உள்ளது. பொதுப்பணித்துறை மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் பல குளறுபடிகள் நடந்துள்ளது. தொடர்ந்து சிபிஐ-யின் நடவடிக்கையை கண்காணித்து அதற்கு தகுந்தாற்போல் எங்களின் போராட்டம் இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.